ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2441/19 - 2025 ජූනි මස 18 වැනි බදාදා - 2025.06.18

2441/19 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPE/LND/ACQUI/5/2/1.
காணி அமைச்சின் இல.: 4-3/18/2019/WS/485.

திட்டமிடப்பட்ட கட்டுபொத்த - பமுணாகொட்டுவ, பண்டுவஸ்நுவர நீர் வழங்கல் திட்டத்தில், ரம்பேவெவ 2000 கனமீற்றர் நிலத்தடி நீர்த்தேக்கமும், 450 கனமீற்றர் நீர் கோபுரமும் நிர்மாணிப்பதற்காக, கீழ் காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல.1362 கல்லேஹேபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் பாத்தமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, குருநாகல் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக் கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 420849 இல், தொகுதி இல. 02, தாள் இல. 1 இல் காணப்படும் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள்:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: தங்கஹமுலஹேன; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு (ஆரம்ப உரிமையாளர் - திரு. விஜேசிங்ஹ ஆரச்சிலாகே சுனில் விஜேசிங்ஹ, ரணவிரு பிரதீப் மாவத்தை, பாத்தமுல்ல, கணத்தேவெவ); விஸ்தீரணம்: 0.2018 ஹெக்டயார் (01 றூட் 39.8 பேர்ச் ).

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: - ; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார் (0.2 பேர்ச்).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. பீ. எஸ். ஜே. த. சொய்ஸா,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர கிழக்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர கிழக்கு,
2025, யூன் 05.

EOG 06 - 0140